இன்றைய வேளாண் செய்திகள்

13.05.2013 A.M

## விவசாயக் கடனுக்கு ரூ.4,500 கோடி

கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு கடன் வழங்க தமிழக முதல்வர் ரூ.4,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் என நெய்வேலி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.பி.எஸ்.சிவசுப்ரமணியன் பேசினார்.

பண்ருட்டி ஒன்றியம், சிலம்பிநாதன்பேட்டை ஊராட்சி பத்திரக்கோட்டை கிராமத்தில் உழவர் பெருவிழா சனிக்கிழமை நடந்தது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நெய்வேலி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.பி.எஸ்.சிவசுப்ரமணியன் பேசியது: விவசாய உற்பத்தியை 2, 3 மடங்கு உயர்த்த வேண்டும், உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக இந்தியாவில் குஜராத், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலத்தில்தான் உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்காக ரூ.4,500 கோடியை தமிழக முதல்வர் ஒதுக்கீடு

செய்துள்ளார்.

எதிர்கால சந்ததியினரை காக்க வேண்டுமானால் மரங்களை நடவேண்டும், தண்ணீர் மற்றும் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

பின்னர் விவசாயிகளுக்கு ஸ்பிரேயர், விதை, வீரிய ரக மரக்கன்றுகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

ஊராட்சி மன்றத் தலைவர் வி.ரகுராமன் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் சங்கர் முன்னிலை வகித்தார். பண்ருட்டி ஒன்றியச் செயலர் கமலக்கண்ணன், மாவட்ட கவுன்சிலர் கே.தேவநாதன், கடலூர் விற்பனைக் குழுச் செயலர் ஹரிதாஸ், தோட்டக்கலை அலுவலர்

ரவிசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வேளாண்மை அலுவலர் சண்முகசுந்தரம் நன்றி கூறினார்.

## சாகுபடி முறையை இயந்திரமயமாக்கினால் கூடுதல் லாபம் பெற முடியும்

விவசாய சாகுபடி முறையை இயந்திரமயமாக்கினால் கூடுதல் லாபம் பெற முடியும் என்றார் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் எம்.சி. சம்பத்.

கடலூர் மஞ்சக்குப்பத்தில் உழவர் பெருவிழா சனிக்கிழமை நடந்தது. விழாவுக்கு, தலைமை வகித்து ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் பேசுகையில், "விவசாய உற்பத்தியைப் பெருக்க உயர்ந்த தொழில்நுட்பங்களை எப்படி எல்லாம் பயன்படுத்துவது என்பது பற்றி விவசாயிகள் தெரிந்து கொள்வதற்காகவே இதுபோன்ற உழவர் விழாக்கள் நடத்தப்படுகின்றன.

குறைந்த பரப்பளவில் அதிக விளைச்சல் பெருக்குவது குறித்தும் இங்குள்ள கண்காட்சியின் வாயிலாக விவசாயிகளுக்கு விளக்கப்பட்டுள்ளது' என்றார்.

விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் பேசியது, "உழவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியில் வீட்டு காய்கறித் தோட்டம் எவ்வாறு அமைப்பது என்பது பற்றி தெளிவாக காண்பித்துள்ளனர்.

இது தவிர எலி ஒழிப்பது எப்படி?, பயிர்களுக்கு வரும் நோய்கள், அதைத் தடுக்கும் முறைகள் பற்றி கண்காட்சியில் விளக்கப்பட்டுள்ளது.

வேளாண் சாகுபடியில் விவசாயிகள் இயந்திரமயமாக்கிட வேண்டும். அப்போதுதான் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும்' என்றார்.

வேளாண் இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். மாவட்ட ஊராட்சித் தலைவர் மல்லிகா வைத்திலிங்கம், அதிமுக நகரச் செயலர் குமரன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவவர் மணிமேகலை பழனிச்சாமி, நகர்மன்ற துணைத் தலைவர் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வேளாண்பொருள் பயன்பாடு குறித்த விழிப்புணர்வுப் பேரணி

பாரம்பரிய வேளாண் பொருள்களின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வுப் பேரணி கடலூரில் சனிக்கிழமை நடந்தது.

தொன்றுதொட்டு நாம் பயன்படுத்திய பாரம்பரிய வேளாண் பொருள்கள், நமது உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்தன.மருத்துவத் தன்மைகளைக் கொண்ட அவை, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்தன. நீண்டகாலமாக மக்கள் மத்தியில் புழக்கத்தில் இருந்து வந்த பாரம்பரிய வேளாண் பொருள்கள் தற்போது வழக்கத்தில் இல்லாமல் போய்விட்டன.

பாரம்பரியமிக்க வேளாண் பொருள்கள் பயன்பாட்டை மீண்டும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லவும், அவற்றின் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையிலும், இயற்கையின் படைப்பைப் பயன்படுத்தி மக்கள் நலத்தைப் பேணிப் பாதுகாக்கும் வகையிலும், விவசாயத்தின் வருமானத்தைப் பெருக்கும் வகையிலும் பாரம்பரிய வேளாண் பொருள்கள் குறித்த விழிப்புணர்வுப் பேரணி கடலூரில் நடைபெற்றது.

இதில் பாரம்பரிய வேளாண் பொருள்களான இளநீர், சீயக்காய், பருத்தி, பனை விசிறி உள்ளிட்ட பொருள்களை கைகளில் ஏந்தி மாணவர்களும், விவசாயிகளும் கடலூர் உழவர் சந்தையில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை பேரணியாக சென்றனர்.

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் பேரணியைத் தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் முன்னிலை வகித்தார்.

நகர்மன்றத் தலைவர் கே.சி. சுப்ரமணியன், வேளாண்துறை இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அசோகன், துணை இயக்குநர் (மாநில திட்டம்) சந்திரமோகன், உதவி இயக்குநர் ஜெயக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பெருங்கோழியில் உழவர் பெருவிழா

உத்தரமேரூர் தாலுக்கா வேளாண்மைத் துறை சார்பில் உழவர் பெருவிழா மற்றும் விழிப்புணர்வு முகாம் பெருங்கோழி கிராமத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குனர் ஆர்.கிருஷ்ணவேணி தலைமை வகித்தார். ஒன்றியக்குழு தலைவர் ஆர்.கமலக்கண்ணன் முன்னிலை வகித்தார். இதில், தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் விதைச்சான்று

துறை, வேளாண் விற்பனைத் துறை மூலம் செயல்படுத்தபடும் திட்டங்கள் குறித்து எடுத்துக் கூறப்பட்டது.

மேலும், பராம்பரிய வேளாண் விளைபொருட்களான இளநீர், பருத்தி, சீயக்காய், கேழ்வரகு போன்றவற்றின் பயன்பாடுகள் குறித்து தெரிவிக்கப்பட்டது. பண்ணைக் குட்டைகள் அமைத்தல்,

சூரிய சக்தி மூலம் இயங்கும் மின்மோட்டார்கள் வாங்குவதற்கு வேளாண்மை உதவி இயக்குனரிடம் முன்பதிவு செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குக் கைத்தெளிப்பான் கருவிகளை ஒன்றியக்குழு தலைவர் வழங்கினார். இதில் 400-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். ஊராட்சி மன்றத் தலைவர் வள்ளி முருகன் நன்றி கூறினார்.

## பசுந்தீவனம் சாகுபடிக்கு மானியம்: ஆட்சியர்

திருவள்ளூர் மாவட்டத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், பசுந்தீவனம் சாகுபடி செய்ய அரசு மானியம் வழங்குவதாக மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழகத்தில் விலையில்லா கால்நடைகள் வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் திருவள்ளூர் மாவட்டத்தில் மாநிலத் தீவன விரைவு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், தீவனப்புல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டுகளை போலவே, இந்த ஆண்டிலும் பசுந்தீவனம் சாகுபடிக்கு அரசு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்த மானியத்தை பெற விரும்பும் விவசாயிகள், தங்களின் அருகே உள்ள கால்நடை நிலையங்களை அணுகலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் சூரிய ஒளியில் இயங்கும் மோட்டார்

நீர்ப்பாசனம் தடையில்லாமல் நடைபெற சுமார் ரூ.4 லட்சம் மதிப்புள்ள சூரிய ஒளியால் இயங்கும் சோலார் மோட்டார் விவசாயிகளுக்கு 80 சதவீத மானிய விலையில் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட வேளாண் துணை இயக்குனர் பாபு தெரிவித்தார்.

கும்மிடிப்பூண்டியை அடுத்த ஈகுவார்பாளையத்தில் உழவர் பெருவிழா நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் கே.எம்.எஸ்.சிவகுமார் தலைமை வகித்தார். மாவட்டக் கவுன்சிலர் ஸ்ரீதர், துணைத் தலைவர் எபினேசர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி அலுவலர் சிவசங்கரி வரவேற்றார்.

வேளாண் உதவி இயக்குனர் சண்முகையா செம்மை நெல் சாகுபடி குறித்தும், தோட்டக்கலை இயக்குனர் ராமலிங்கம் தோட்டக்கலை துறை சார்பாக வழங்கப்படும் மானியங்கள் குறித்தும்,

துணை வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன் உயிர் உரங்கள் குறித்தும், வேளாண் பொறியியல் துறை பொறியாளர் துரைசாமி மானிய விலையில் வழங்கப்படும் விவசாய இயந்திரங்கள் குறித்தும், வேளாண் விற்பனை மற்றும் வணிக பிரிவு அலுவலர் அருள்முருகன் விளைபொருட்களை சந்தை படுத்துதல் குறித்தும் பேசினர்.

சிறப்பு அழைப்பாளராகக் கலந்துக் கொண்ட மாவட்ட வேளாண் துறை துணை இயக்குனர் பாபு பேசியது:

தற்போதைய சூழலில் விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும் மின்வெட்டைச் சமாளிக்கும் வகையில், விவசாயிகளுக்கு மானிய விலையில் சூரிய ஒளியால் இயங்கும் மோட்டார்களை வழங்க முதல்வர் ஆணை பிறப்பித்துள்ளார். அதன்படி சுமார் ரூ.4 லட்சம் மதிப்புள்ள சோலார் மோட்டார் 80 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

முதல் கட்டமாக 2 ஆயிரம் பேருக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் மின்சாரம் இல்லாத நிலையிலும் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டாரைப் பயன்படுத்தி பம்பு செட்டுகள் மூலம் வயல்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த முடியும்.

கம்பு, கேழ்வரகு, சாமம், வரகு, தினை போன்ற சிறு தானியங்களைப் பயிரிட விவசாயிகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த அதிக அளவில் மானியங்களும், தரமான விதைகளும் வழங்கப்படும் என்றார்.

விழாவில், விவசாயிகளுக்கு இடுபொருட்கள், கையேடு, மானிய விலையிலான மினி டிராக்டர் உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

## வேளாண் விளைபொருள்கள் பயன்பாடு குறித்த பேரணி

திருவள்ளூரில் பாரம்பரிய வேளாண் விளைப்பொருள்கள் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பேரணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வேளாண் துறை சார்பில் நடைபெற்ற இப்பேரணிக்கு திருவள்ளூர் நகர்மன்றத் தலைவர் ஏ.பாஸ்கரன் தலைமை வகித்தார்.

ஒன்றியக்குழு தலைவர் புட்லூர் ஆர். சந்திரசேகர் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் பேரணியை தொடங்கி வைத்தார்.

இப்பேரணியில் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## காரைக்கால் பகுதி பயிர்ச் சேதத்துக்கு ரூ.100 கோடி இடைக்கால நிவாரணம்

காரைக்கால் பகுதியில் பயிர்ச் சேதத்துக்கு ரூ.100 கோடி இடைக்கால நிவாரணம் வழங்க மத்திய அரசைக் கேட்டிருப்பதாக மத்திய இணையமைச்சர் வே.நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

பருவமழை பொய்த்ததாலும், காவிரியில் தண்ணீர் இல்லாததாலும் காரைக்கால் கடைமடைப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு நிவாரணம் வழங்க புதுச்சேரி அரசிடம் வலியுறுத்தப்பட்டு வந்தது. ஆனால் புதுவை அரசு, கடந்த 3 மாதங்களாக சேத மதிப்பு குறித்த அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பாமல் உள்ளது.

இந்நிலையில் புதுச்சேரி மக்களவை உறுப்பினர் என்ற முறையில், மத்திய உள்துறை அமைச்சர், வேளாண் துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து இது தொடர்பாக பேசியுள்ளேன்.

அப்போது வறட்சி பாதித்தப் பகுதிகளில் சேதத்தைக் கணக்கிட, தமிழகத்தைப் போலவே காரைக்காலுக்கும் மத்தியக்குழுவை அனுப்ப வேண்டும் என்றும், உடனடி இடைக்கால நிதியாக ரூ.100 கோடி வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளேன்.

இக்கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே, சேத மதிப்பை மாநில அரசு உடனடியாக மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும்.

காரைக்கால் மீனவர்கள்...

இலங்கை கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த காரைக்கால் மீனவர்கள் 26 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது.

அவர்கள் கடந்த இரண்டரை மாதங்களாக இலங்கைச் சிறையில் இருக்கின்றனர். அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அவர்களின் குடும்பத்தினரிடம் உறுதி அளித்தோம்.

ஆனால் இலங்கை அரசைக் கண்டித்து தமிழக, புதுச்சேரியில் போராட்டங்கள் நடைபெற்று வருவதால், கைதான தமிழக மீனவர்களை விடுவிப்பதில் இலங்கை அரசு இறுக்கம் காட்டி வருகிறது.

இதன் காரணமாக, இலங்கை, இந்திய தூதரங்களிடம் இது தொடர்பாக பேச்சு நடத்தப்பட்டு வருகிறது.

ஹஜ் பயணம் செய்வோர் எண்ணிக்கை உயர்வு:

புதுச்சேரி, காரைக்கால் பகுதியிலிருந்து ஹஜ் பயணம் மேற்கொள்ளும் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 62-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு ஆண்டுகளை விட இது குறைவு. இதை உயர்த்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில், புதுச்சேரி மாநிலத்திலிருந்து ஹஜ் புனித யாத்திரை செல்வோர் எண்ணிக்கை 197-ஆக உயர்த்தப்பட்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விலையை கேட்டாலே கண்ணீரை வரவழைக்கும் வெங்காயம்

மதுரை மாவட்டம், மேலூர் தினசரி சந்தையில் வெங்காயத்தின் விலையைக் கேட்டாலே கண்ணிலிருந்து நீரை வரவழைக்கும் அளவுக்கு உயர்ந்து வருகிறது.

15 நாள்களுக்கு முன், சின்ன வெங்காயத்தின் விலை கிலோ ரூ. 25 ஆக இருந்தது. அதன்பின்னர், கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து, தற்போது கிலோ 60 ரூபாயாக உள்ளது. மதுரை, ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களிலிருந்து மேலூர் தினசரி காய்கறி சந்தைக்கு 7 முதல் 10 மினி லாரிகளில் காய்கறிகள் கொண்டு வரப்படுகின்றன.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக மேலூர் சந்தையில் காய்கறிகளின் விலை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

காரட், பீன்ஸ் விலை கிலோ ரூ. 80 ஆகவும், கிலோ ரூ. 10-க்கு விற்பனையான தக்காளி ரூ. 40 ஆகவும் அதிகரித்துவிட்டது. தற்போது, டீசல் விலை உயர்வு காரணமாகவும், வரத்து குறைவாக

உள்ளதாலும், வெங்காயம் மற்றும் காய்கறிகளின் விலை மேலும் உயரக்கூடும் என்கின்றனர் வியாபாரிகள்.

## பருவ மழை பொய்த்ததால் மலைப் பூண்டு விவசாயம் பாதிப்புநமது நிருபர்

கொடைக்கானலில் பருவமழை பொய்த்ததால் பூண்டு விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானலில் விவசாயப் பயிர்களான கேரட், உருளை, பீன்ஸ், பீட்ரூட் போன்ற காய்கறிகளும் விளைந்து வருவது போல மலைப் பகுதிகளான பூம்பாறை,மன்னவனூர், கூக்கால்,கிளாவரை,கவுஞ்சி,குண்டுபட்டி,விடுதலை நகர், பழம்புத்தூர்,புதுப்புத்தூர், வில்பட்டி, புலியூர் உள்பட 20-க்கும் மேற்பட்ட மேல்மலை கிராமங்களில் பணப் பயிரான பூண்டு விளைவிக்கப்படுகிறது.

பூண்டு விளைவதற்கு போதிய அளவு தண்ணீர் தேவைப்படும். 5 மாதத்தில் பூண்டு நல்ல விளைச்சல் அடைந்து அதிக விலைக்குப் போகும். கொடைக்கானலில் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக, பருவமழை பொய்த்ததால் பூண்டு விளைச்சல் இல்லாமல் இருந்து வந்தது.

பூண்டு விளைவிப்பதற்கு நல்ல சாண உரங்கள் தேவைப்படும். நல்ல சத்துள்ள உரங்கள் வைக்க வேண்டும். பூச்சி நோய் தாக்காமல் இருக்க பூச்சி தெளிப்பானை பயன்படுத்த வேண்டும். நன்கு விளைந்த பின் பூண்டைக் காயவைக்க வேண்டும் அதன்பின் தரம் வாரியாக விவசாயிகள் வெளிமார்க்கெட்டுக்கு அனுப்புவது வழக்கம்.

இதுகுறித்து, மேல்மலை விவசாய சங்கத்தினர் கூறியது:

கொடைக்கானலில், கடந்த பல மாதங்களாக பருவ மழை பெய்யாததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மேல்மலைக் கிராமங்களில் மட்டும் அதிக அளவில் மலைப்பூண்டு பயிரிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 25-க்கும் மேற்பட்ட

கிராமங்களில் வெள்ளைப் பூண்டு பயிரிடப்பட்டிருந்தது.ஆனால் போதிய மழை இல்லாத காரணத்தால் பூண்டு விளைச்சல் குறைந்துள்ளது.

பூண்டில் மலைப் பூண்டு, ஒற்றைப் பூண்டு, பெரும் பூண்டு ஆகிய வகைகள் உள்ளன.

பல வெளியூர்களில் இருந்து வரும் பூண்டைப் போல அல்லாமல், கொடைக்கானல் மலைப் பூண்டுக்கு நல்ல மதிப்பும் மற்றும் விலையும் கிடைக்கும்.

உணவுகளில் அதிக அளவில் மலைப் பூண்டு பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மலைப் பகுதிகளில் விளையும் பூண்டுகளைக் கொண்டு செல்வதற்கு சாலை வசதி மற்றும் போக்குவரத்து வசதி ஏற்படுத்தி தரவேண்டும்.

மலைப் பூண்டு விற்பனைக் குழுத் தலைவர் கூக்கால் ஆறுமுகம் கூறியதாவது:

வெளிமாநில பூண்டுகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஆனால் கொடைக்கானல் மலைப் பூண்டுக்குத் தான் நல்ல விலையும், மார்க்கெட்டில் மதிப்பும் உள்ளது கொடைக்கானல் மலைப் பகுதியிலிருந்து ஆண்டுதோறும் 300 முதல் 400 டன் வரையிலும் மார்க்கெட்டிற்கு மலைப் பூண்டு கொண்டு செல்வது வழக்கம். ஆனால்

இந்தாண்டு மழை இல்லாததால் 100 முதல் 150 டன் வரையில் மட்டுமே பூண்டு கொண்டு செல்லப்பட்டது.

நல்ல விளைச்சல் இருந்தால் 100 கிலோ ரூ. 12 ஆயிரம் வரை விற்பனையாகும் இந்தாண்டு 100 கிலோ ரூ. 8 ஆயிரம் முதல் ரூ. 9 ஆயிரம் வரை விற்கிறது.

புகை பூண்டு கிலோ ரூ. 70 முதல் ரூ. 80 வரையும், பச்சைப் பூண்டு ரூ. 40 முதல் ரூ. 50 வரையும் விற்பனை ஆகிறது.

மேலும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படும் பூண்டுகள் வத்தலகுண்டு குடோனில் வைக்கப்பட்டு மொத்த வியாபாரிகள் அங்கு வந்து பல இடங்களுக்கும் கொண்டு செல்கின்றனர்.

தேனி மாவட்டம், வடுகபட்டியில் உள்ள வியாபாரிகளிடம் பல்வேறு பிரச்னைகளுக்காக கடன் பெற்றுள்ளதால், குறைந்த விலைக்கு பூண்டுகளை விற்பனை செய்து வருகின்றனர். இதனால் வத்தலகுண்டுவில் உள்ள பூண்டு மார்க்கெட்டிற்கு வியாபாரிகள் சரியாக வருவதில்லை. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவற்றை அரசு அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை.

பூண்டு விவசாயத்தால் இந்த ஆண்டு ரூ. 5 கோடி வரை விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு உதவி வழங்க வேண்டும் என்றார்.

## கிராமங்களில் உழவர் பெருவிழா

பழனி அருகே அமரபூண்டி, மேலக்கோட்டை, வேப்பன்வலசு பகுதிகளில் உழவர் பெருவிழா நடைபெற்றது.

தமிழக அரசின் உத்தரவின்படி புத்தாண்டு முதல் வேளாண். துறை சார்பில் உழவர் பெருவிழா கிராமங்களில் நடைபெற்று வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை அமரபூண்டி, மேலக்கோட்டை பகுதிகளிலும், சனிக்கிழமை வேப்பன்வலசு பகுதியிலும் உழவர் பெருவிழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி தலைமை வகித்தார். அமரபூண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊராட்சித் தலைவர் செல்வி மருதமுத்து, துணைத் தலைவர் செல்வராஜ், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் சிவனேசன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

திண்டுக்கல் மாவட்ட வேளாண். துறை இணை இயக்குநர் சம்பத்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தலைமை உரை நிகழ்த்தினார்.

வேப்பன்வலசு பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஊராட்சித் தலைவர் வெள்ளைச்சாமி, ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் கவிதா அருண் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

விழாக்களில் தோட்டக்கலைத் துறை, வேளாண். துறை, வேளாண். பொறியியல் துறை, வேளாண் விற்பனைத் துறை உள்ளிட்ட பல துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்று தங்கள் துறை சார்ந்த தொழில்நுட்பங்கள், நலத்திட்டங்கள் குறித்து விளக்கினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் கணேசன், துணை வேளாண்மை அலுவலர்கள் துரைச்சாமி, சின்னமாணிக்கம், செல்லச்சாமி மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

## வறட்சியால் கருகும் கரும்பு, வாழை: விவசாயி வேதனை

வறட்சியால் பயிரிடப்பட்டுள்ள கரும்பு, வாழை பயிர்கள் கருகுவதால் விவசாயி வேதனையில் உள்ளார்.

சிவகங்கை மாவட்டம், தமறாக்கி காலனியில், குமாரபட்டி ஊராட்சி காரம்போடையைச் சேர்ந்தவர் விவசாயி அசல்ராஜா. 5 ஏக்கரில் கரும்பும், 2 ஏக்கரில் வாழையும் பயிரிட்டுள்ளார். கடந்த 5 மாதங்களுக்கு முன் சுமார் 5 மணி நேரத்திற்கு பாய்ச்சும் அளவுக்கு தண்ணீர் இருந்ததால் ரூ.3 லட்சம் செலவில் கரும்பும், ரூ.2 லட்சம் மதிப்பில் வாழையையும் பயிரிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் தண்ணீர் பாய்ச்சியதால் விளைவிக்கப்பட்ட கரும்பும், வாழையும் தற்போது மழை இல்லாததாலும், வறட்சி நிலவுவதாலும் சுமார் 1 மணி நேரம் கூட தண்ணீர் பாய்ச்ச வழி இல்லாமல் போனதால் வாழைப் பயிருக்கு நீர் பாய்ச்சுவதை விட்டு விட்டு கரும்புக்கு மட்டும் தண்ணீர் பாய்ச்சி வந்தாராம்.

இந்நிலையில் கரும்புக்கும் தண்ணீர் போதாததால் இப்பயிரும் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து விவசாயி அசல்ராஜா கூறியதாவது:

கரும்பு ஆலையின் உதவியுடன் 5 ஏக்கரில் கரும்பு பயிர் விவசாயத்தை 5 மாதங்களுக்கு முன் மேற்கொண்டேன்.

இதற்காக ஆலை எனக்கு ரூ.50ஆயிரம் கடன் உதவி செய்துள்ளது. இந்தப் பணத்தைக் கொண்டு உரம் வாங்கி கரும்புக்கு போட்டாகி விட்டது.

தற்போது தண்ணீர் இல்லாததால் மேற்கொண்டு பயிரைக் காப்பாற்ற வழியில்லை. ஆழ்துழை கிணறு அமைக்கலாம் என்றால் வங்கிக் கடன் கிடைக்கவில்லை.

இருக்கும் நகைகளை அடமானம் வைத்து விவசாயத்திற்கு செலவழித்தாகி விட்டது. விவசாயத்தைத் தவிர வேறு ஏதும் தெரியாததால் மாற்று வேலைக்கு செல்லவும் வழியில்லை.

அரசும், மாவட்ட நிர்வாகமும் தோட்டத்து நிலத்தை ஆய்வு செய்து நிவாரணம் ஏதேனும் வழங்கினால் தான் விவசாயத்தை விவசாயிகள் நினைத்துப் பார்க்க முடியும் என்றார்.

இதே நிலை இப்பகுதியில் உள்ள விவசாயிகள் பலருக்கும் ஏற்பட்டுள்ளது.

ஏராளமான ஏக்கர் கரும்பு, வாழைப் பயிர்கள் கருகி விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### நம்பியூர் பகுதியில்சூறாவளியுடன் கனமழை

நம்பியூர் வட்டாரத்தில் பலத்த சூறாவளிக் காற்றுடன் பெய்த கனமழையால் ரூ. 5 லட்சம் மதிப்புள்ள வாழைகள் சேதமாயின.

சனிக்கிழமை இரவு பலத்த இடி, மின்னல், சூறாவளிக் காற்றுடன் நம்பியூர் மற்றும் சுற்றுப்பகுதிகளான வேமாண்டம்பாளையம், லாகம்பாளையம், மீன்காரம்பாளையம், வாளியூர்,

கோசனம், சாவக்காட்டுப்பாளையம் உள்பட பல்வேறு பகுதிகளில் காற்றுடன் கூடிய மழை பெய்தது.

இதனால், வேமாண்டம்பாளையம், லாகம்பாளையம், மீன்காரம்பாளையம் ஆகிய பகுதிகளில் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் 8 மாதங்கள் வளர்ந்து பலன் தரும் நிலையில் இருந்தன. இவை அனைத்தும் சூறாவளிக் காற்றில் முறிந்து விழுந்துள்ளன.

இதுகுறித்து நம்பியூர் பகுதியில் உள்ள விவசாயிகள் கூறியதாவது:

ஏற்கனவே, நம்பியூர் வட்டாரப் பகுதிகளில் கடும் வறட்சி நிலவி வருகிறது. கீழ்பவானி வாய்க்காலிலும் அவ்வப்போது உயிர்த் தண்ணீர் மட்டுமே விடப்பட்டது. இதனால் விவசாயிகளாகிய நாங்கள் எங்களது தோட்டங்களில் போர்வெல் அமைத்து மிகுந்த சிரமத்திற்கு இடையே வாழைகளை வளர்த்து வந்தோம்.

8 மாதங்கள் முடிவடைந்த நிலையில், கதளி, நேந்திரன், ரொபஸ்டோ போன்ற ரக வாழைகள் இன்னும் ஒரு மாத காலத்தில் அறுவடை செய்யும் நிலையில் இருந்தன. இந்நிலையில், பலத்த சூறாவளிக் காற்றால், அனைத்து வாழைகளும் சேதமடைந்து விட்டன. இதனால் பல லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே அரசு எங்கள் பால் கருணை கூர்ந்து சூறாவளிக் காற்றால் பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

## நாமக்கல் அருகே சூறாவளிக் காற்றுடன் மழை

நாமக்கல் பகுதியில் வெள்ளிக்கிழமை சூறாவளிக் காற்றுடன் பெய்த கன மழைக்கு சுமார் 30 வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன. மக்கள் இரவில் தூங்க முடியாமல் மிகுந்த அவதிக்கு உள்ளாகினர். தவிர, சேந்தமங்கலம் பகுதியில் 50 ஆண்டு கால புளியமரம் ஒன்றும் வேரோடு சாய்ந்தது.

நாமக்கல் அருகேயுள்ள சிவியாம்பாளையம் அருந்ததியர் காலனியில் 80-க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை மாலை நாமக்கல் சுற்று வட்டாரப் பகுதிகளில் சுமார் 2 மணி நேரம் கனமழை பெய்தது. அப்போது, வீசிய சூறாவளிக் காற்றில் சுமார் 30 வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன.

சில வீடுகளின் கூரைகள் விழும் நிலையில் உள்ளதால் அந்த வீடுகளில் தங்குவதற்கு மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதுகுறித்து, அந்தப் பகுதி மக்கள் அளித்த தகவலை அடுத்து, வெள்ளிக்கிழமை இரவு அங்கு வந்த கிராம நிர்வாக அலுவலர் பாதிப்புகளை கணக்கிட்டு மாவட்ட நிர்வாகத்துக்கு அனுப்புவதாகத் தெரிவித்தார்.

ஆனால், இரவில் தங்குவதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டது.

இதையடுத்து, வட்டாட்சியர் ராமசாமி இரவு 10 மணிக்கு அங்கு சென்று பாதிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டார். பிறகு, வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் சேதத்தை கணக்கிட்டு நிவாரணம் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

பாதிப்பு குறித்து அந்தப் பகுதி மக்கள் கூறியது:

சிவியாம்பாளையம் அருந்ததியர் காலனியில் உள்ள பெரும்பாலான வீடுகள் எம்ஜிஆர் முதல்வராக இருந்த காலத்தில் கட்டப்பட்டவையாகும். அதற்குப் பிறகு, பழுதடைந்த வீடுகளை சீரமைத்துத் தரக் கோரி பலமுறை கோரிக்கை விடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது கன மழைக்கு வீடுகள் சேதமடைந்துள்ளன. இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

50 ஆண்டு கால புளியமரம் சாய்ந்தது

வெள்ளிக்கிழமை மாலை சூறாவளிக் காற்றுடன் பெய்த  மழைக்கு, சேந்தமங்கலம், வடுகப்பட்டி பகுதியில் சாலையோரத்தில் இருந்த 50 ஆண்டு கால புளியமரம் ஒன்று வேரோடு சாய்ந்தது.

இதனால், அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து, அங்கு வந்த சேந்தமங்கலம் போலீஸார் வாகனங்களை மாற்றுப் பாதையில் திருப்பி விட்டனர். பிறகு, பொக்லைன் இயந்திரம் கொண்டு புளிய மரம் அகற்றப்பட்டது.  சுமார் 2 மணி நேரத்திற்குப் பிறகு, போக்குவரத்து சீரடைந்தது.

இதேபோல, கொல்லிமலை அடிவாரம், காரவள்ளி பகுதியில் சூறாவளிக் காற்றுக்கு தென்னை மரம் முறிந்து விவசாயி வீட்டின் மீது விழுந்தது. இதில், வீட்டில் இருந்தவர்கள் அந்த நேரத்தில் வெளியே வந்திருந்ததால், அதிர்ஷ்டவசமாக காயமின்றி தப்பினர்.

## "வறட்சியைப் போக்க ரூ. 47 கோடியில் பணிகள்'

கரூர் மாவட்டத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க ரூ. 47 கோடியில் பல்வேறு பணிகள் நடைபெறுகின்றன என்றார் போக்குவரத்துத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி.

கரூர் ஆட்சியரகத்தில் கோடையில் நிலவும் வறட்சியைப் போக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பல்வேறு துறை அலுவலர்களுடன் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்துக்குப் பிறகு அவர் கூறியது:

கரூர் மாவட்டத்தில உள்ள 2 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள், 8 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 157 கிராம ஊராட்சிகளில் குடிநீர் பற்றாக்குறையை தவிர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ. 21 கோடியில் 627 ஆழ்குழாய்கள், 388 மினி பவர் பம்புகள், 423 இதர பணிகளும் நடைபெற்று வருகின்றன.

மேலும் வறட்சியைப் போக்க, போர்க்கால அடிப்படையில் ரூ. 26 கோடியில் 374 அடிகுழாய்களும், 396 மினிபவர் பம்புகளும், 703 இதர பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன என்றார்.

கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தலைமை வகித்தார். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) டி.ஜி. வினய், எம்எல்ஏ பாப்பாசுந்தரம், மாவட்ட ஊராட்சித் தலைவர் கீதாமணிவண்ணன், நகராட்சிப் பொறியாளர் புண்ணியமூர்த்தி, கோட்டாட்சியர் நெல்லைவேந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பால்பண்ணை உதவியாளர் பயிற்சி

கரூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மையத்தில் ஒரு மாத கால பால்பண்ணை உதவியாளர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது என்றார் இந்த மையத் தலைவர் ந. அகிலா.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஒரு மாத கால பயிற்சியில் அறிவியில் ரீதியான கறவைமாடு வளர்ப்பு குறித்த பயிற்சி அளிக்கப்படுவதுடன் கறவை மாடுகளைத் தேர்வு செய்யும் முறை, வயதைக் கண்டறிதல், கால்நடைகளுக்கு அடையாளம் இடும் முறை, மாடுகளின் எடையைக் கணித்தல், கொட்டகை பராமரிப்பு முறை, தீவன மேலாண்மை, பால் கறக்கும் முறை, மடி வீக்க நோய் சோதனை, கன்று பராமரிப்பு, சினை மாடுகள் பராமரிப்பு, தொற்று நோய் தடுப்பு முறை, மாட்டுப்பண்ணையின் வரவு - செலவு கணக்குத் திட்ட அறிக்கை தயாரித்தல் குறித்துப் பயிற்சியளிக்கப்படுகிறது.

கறவை மாட்டுப் பண்ணைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு களப் பயிற்சியும் வழங்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சி பெறுவதன் மூலம் வர்த்தக ரீதியான கறவை மாட்டுப்பண்ணைகளில் வேலைபெறும் வாய்ப்புள்ளது. பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் ரூ. 1,000 கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும். மேலும் விவரங்களுக்கு 04324 - 294335 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம்: 21.66 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 21.66 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 91 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க அரசு முன்வர வேண்டும் என்றார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மக்களவை முன்னாள் உறுப்பினர் கே. சுப்பராயன்.

நாகை மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட திருப்பூண்டியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற மேதின விழா பொதுக்கூட்டத்தில் அவர் பேசியது :

தமிழகத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியைத் தொடர்ந்து, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், வறட்சியால் பல்வேறு பாதிப்புகளுக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு இதுவரை எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை.

விவசாயத் தொழிலாளர்களை பாதுகாக்கும் வகையில் உடனடியாக நிவாரணம் வழங்க அரசு முன்வர வேண்டும்.

ரூ.2.10 லட்சத்தில் அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடு கட்டுவது என்பது தற்போதைய சூழலில் இயலாத காரியமாக உள்ளது. எனவே, பசுமை வீடுகளுக்கான தொகையை அரசு உயர்த்தி வழங்க வேண்டும்.

தமிழகத்தில் சாதி பிரச்னைகளை மையமாகக் கொண்டு அரசியல் ஆதாயம் தேட சிலர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். பெரியார், ஜீவா போன்றவர்கள் பிறந்த தமிழகத்தில் சாதி அரசியல் நிச்சயமாக எடுபடாது.

வரும் மக்களவைத் தேர்தலில், காங்கிரஸ் மற்றும் பாஜக அல்லாத மாற்று அரசு அமைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மக்கள் முழுமையான ஆதரவு அளிக்க வேண்டும் என்றார் சுப்பராயன்.

கட்சியின் மாவட்டச் செயலர் எம். செல்வராசு, ஒன்றியச் செயலாளர் டி. செல்வம், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் மல்லிகா, ஏஐடியுசி மாவட்டச் செயலர் கே. ராமன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலர் கே. பாஸ்கர், விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றியச் செயலர் வி. சுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக, வேளாங்கண்ணி சாலை சந்திப்பு அருகே மே தின கொடிக்கம்பம் மற்றும் கல்வெட்டு திறப்பு விழா நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, பெரியத்தும்பூர், கருங்கண்ணி, சடையன்கோட்டகம் ஆகிய பகுதிகளில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

## காரைக்கால் பகுதி பயிர்ச் சேதத்துக்கு ரூ.100 கோடி இடைக்கால நிவாரணம்

காரைக்கால் பகுதியில் பயிர் சேதத்துக்கு ரூ.100 கோடி இடைக்கால நிவாரணம் வழங்க மத்திய அரசைக் கேட்டிருப்பதாக மத்திய இணையமைச்சர் வே. நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: பருவமழை பொய்த்ததாலும், காவிரியில் தண்ணீர் இல்லாததாலும் காரைக்கால் கடைமடைப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு நிவாரணம் வழங்க புதுச்சேரி அரசிடம் வலியுறுத்தப்பட்டு வந்தது. ஆனால் புதுவை அரசு, கடந்த 3 மாதங்களாக சேத மதிப்பு குறித்த அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பாமல் உள்ளது.

புதுச்சேரி மக்களவை உறுப்பினர் என்ற முறையில், மத்திய உள்துறை அமைச்சர், வேளாண் துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து இது தொடர்பாக பேசியுள்ளேன். அப்போது வறட்சி பாதித்தப் பகுதிகளில் சேதத்தைக் கணக்கிட, தமிழகத்தைப் போலவே காரைக்காலுக்கும் மத்தியக்குழுவை அனுப்ப வேண்டும் என்றும், உடனடி இடைக்கால நிதியாக ரூ.100 கோடி வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளேன்.

இக்கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே, சேத மதிப்பை மாநில அரசு உடனடியாக மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும்.

காரைக்கால் மீனவர்கள்: இலங்கை கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த காரைக்கால் மீனவர்கள் 26 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது. அவர்கள் கடந்த இரண்டரை

மாதங்களாக இலங்கைச் சிறையில் இருக்கின்றனர். அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அவர்களின் குடும்பத்தினரிடம் உறுதி அளித்தோம்.

ஆனால் இலங்கை அரசைக் கண்டித்து தமிழக, புதுச்சேரியில் போராட்டங்கள் நடைபெற்று வருவதால், கைதான தமிழக மீனவர்களை விடுவிப்பதில் இலங்கை அரசு இறுக்கம் காட்டி வருகிறது.

இது தொடர்பாக இலங்கை, இந்திய தூதரங்களிடம் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது என்றார் நாரயணசாமி.

## விவசாயிகளின் அனைத்து கடன்களையும் ரத்து செய்ய வலியுறுத்தல்

விவசாயிகளின் அனைத்து கடன்களையும் முழுமையாக ரத்து செய்ய வலியுறுத்தி எட்டயபுரத்தில் சனிக்கிழமை நடைபெற்ற விவசாய சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எட்டயபுரம் வட்டம், விவசாயிகள் சங்கத்தின் 4-வது மாநாடு சனிக்கிழமை பேரூராட்சி மண்டபத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு சின்னமலைக்குன்றைச் சேர்ந்த ரெங்கசாமி தலைமை வகித்தார்.

மாநாட்டு கொடியை தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலர் நல்லையா ஏற்றினார். மாநாட்டை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில உதவித் தலைவர் பெரும்படையார் தொடங்கி வைத்துப் பேசினார்.

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அய்யலுசாமி, ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் மன்றச் செயலர் பாலமுருகன், மாவட்ட கட்டுமான தொழிலாளர்கள் சங்கச் செயலர் சேது, விவசாயிகள் சங்க மாநிலக் குழு உறுப்பினர் லெனின்குமார், பாரதி ஆய்வாளர் இளசைமணியன் ஆகியோர் பேசினர். மாநாட்டு அறிக்கையை எட்டயபுரம் வட்ட விவசாயிகள் சங்கச் செயலர் கிருஷ்ணமூர்த்தி சமர்ப்பித்தார். மாநாட்டில் எட்டயபுரம் தாலுகாக் குழுத் தலைவராக ரெங்கசாமி, செயலராக கிருஷ்ணமூர்த்தி, பொருளாளராக ராஜபாண்டியன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: அனைத்து விவசாய கடன்களையும் ரத்து செய்ய வேண்டும். 60 வயது நிரம்பிய அனைத்து விவசாயிகளுக்கும் மாத ஓய்வூதியமாக ரூ. 3 ஆயிரம் வழங்க வேண்டும். வறட்சி நிவாரணப் பணிகளை உடனே தொடங்க வேண்டும். தென்னக நதிகளை இணைக்க வேண்டும். எட்டயபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஊராட்சி

ஒன்றியம், கிளை கருவூலம் ஆகியவை அமைக்க வேண்டும். எட்டயபுரத்தில் அரசு சார்பில் கலைக் கல்லூரி அமைக்க வேண்டும்.

விவசாயிகளின் விளைபொருள்களை பாதுகாக்கும் வகையில், குளிர்பதன கிட்டங்கி அமைக்க வேண்டும். நடப்பு ஆண்டில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு விரைவில் இழப்பீடு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எட்டயபுரம் வட்டச் செயலர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.05.2013 A.M**

---

## ராசிபுரம் பகுதியில் உழவர் பெருவிழா: விவசாயிகளுக்கு செயல் விளக்கம்

ராசிபுரம்: வேளாண் துறை சார்பில், ராசிபுரம் அடுத்த தொட்டியப்பட்டி ஊராட்சி துவக்கப்பள்ளியில், உழவர் பெருவிழா நடந்தது.

வேளாண் உதவி இயக்குனர் வரதராஜூ தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் ஜெயமாலா வரவேற்றார். மண் மாதிரி எடுத்தல், பாசிப்பயறு விதை நேர்த்தி, பார்த்தீனியம் செடி ஒழிப்பு, சின்ன வெங்காயம் விதை நேர்த்தி, மினி டிராக்டர் மற்றும் நிலக்கடலை தரம் பிரித்தல் குறித்து, செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார், இளநிலை பொறியாளர் உதயக்குமார், உதவி வேளாண் அலுவலர் சுப்ரமணியம் உள்பட பலர் பங்கேற்றனர்.

* அணைப்பாளையம் ஊராட்சி துவக்கப்பள்ளியில் நடந்த விழாவில், வேளாண் துணை இயக்குனர் விஸ்வநாதன் முன்னிலை வகித்தார். மரவள்ளி விதை நேர்த்தி, மினி டிராக்டர் மற்றும் மக்காச்சோளம் தரம் பிரித்தல் பற்றி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

* 85 ஆர்.குமாரபாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடந்த விழாவில், பஞ்சாயத்து தலைவர் கவிதா தலைமை வகித்தார். துணைத் தலைவர் ஜெகநாதன் முன்னிலை வகித்தார். மண் மாதிரி எடுத்தல், மரவள்ளி கரணை நேர்த்தி, மினி டிராக்டர் மற்றும் மக்காச்சோளம் தரம் பிரித்தல் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

* புதூர் மலையாம்பட்டி ஊராட்சி துவக்கப்பள்ளியில் நடந்த விழாவில், மண் மாதிரி எடுத்தல், பாசிபயிறு வதை நேர்த்தி செய்தல், மரவள்ளி கரணை நேர்த்தி செய்தல், மினி டிராக்டர் மற்றும் மக்காச்சோளம் தரம் பிரித்தல் குறித்து செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.

* வடுகம் ஊராட்சி துவக்கப்பள்ளியில் நடந்த விழாவில், பஞ்சாயத்து தலைவர் சத்யா முன்னிலை வகித்தார். மண் மாதிரி எடுத்தல், மஞ்சள் தரம் பிரித்தல், பாசிபயிறு விதை நேர்த்தி செய்தல், வெங்காயம் விதை நேர்த்தி செய்தல் குறித்து விளக்கப்பட்டது.

* ஆணைகட்டிப்பாளையம் மாரியம்மன் கோவில் வளாகத்தில் நடந்த உழவர் பெருவிழாவில்,

யூனியன் கவுன்சிலர் சாந்தி முன்னிலை வகித்தார். மஞ்சள் தரம் பிரித்தல், பாசி பயிறு மற்றும் வெங்காயம் விதை நேர்த்தி செய்தல் குறித்து விளக்கப்பட்டது.

## இழப்பீடு! கடும் வறட்சியால் ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம்... கரும்பு பயிரிடுவோர் சங்கத்தினர் கோரிக்கை

நாமக்கல்: "போதிய மழைப் பொழிவு இல்லாததால், பயிரிட்ட கரும்புகள் காய்ந்து, விவசாயிகளுக்கு பெருத்த இழப்பு ஏற்பட்டுள்ளது. அதனால், அவர்கள் நிலையை கருத்தில் கொண்டு, வறட்சி நிவாரணமாக, ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் வழங்க, ஆலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்கச் செயலாளர் நவலடி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

மோகனூரில் உள்ள, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில், 2013-14ம் ஆண்டு அரவை பருவத்துக்கு, நாமக்கல், சேலம், திருச்சி மாவட்டங்களில் உள்ள ஏழு கோட்டங்களில் இருந்து, 3,400 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு, பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதில், நடவு கரும்பு, 600 ஏக்கரும், மறுதாம்பு கரும்பு, 2,800 ஏக்கரும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும், பத்தாயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு பதிவு செய்யப்பட்டு, 4.50 லட்சம் டன் கரும்பு, அரவை செய்து வந்த நிலையில், தற்போது, வெறும், 3,400 ஏக்கர் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளதால், அரவை பருவம் துவங்கி, ஒரு மாதம் வரை மட்டுமே, ஆலை இயங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அதற்கு, தமிழகத்தில், பருவமழை பொய்த்ததாலும், தண்ணீர் பற்றாக்குறையுமே காரணம். அவ்வாறு சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கு, போதிய தண்ணீர் இல்லாததால், 60 சதவீதம் பயிர்கள் காய்ந்து, விவசாயிகளுக்கு பெருத்த இழப்பை ஏற்படுத்தி உள்ளது.

தொடர்ந்து, இதே நிலை நீடித்தால், எஞ்சியுள்ள கரும்பையும் காப்பாற்ற முடியாத நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்படுவர். அதனால், அவர்கள் என்ன செய்வது என தெரியாமல், விழிபிதுங்கி உள்ளனர். தற்போது, ஆறு மாத கரும்பு பயிருக்கு, இதுவரை நடவு கூலி, உரச்செலவு, பார் இழுத்தல் போன்றவற்றுக்காக, 25 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ளனர்.

எனவே, விவசாயிகளின் நிலைமையை கருத்தில் கொண்டு, வறட்சி நிவாரணமாக, ஏக்கர் ஒன்றுக்கு, 25 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்க, ஆலை நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும், ஒருங்கிணைந்த, சேலம் மாவட்டமாக இருந்தபோது, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை என்ற பெயரில், ஆலை இயங்கி

வருகிறது.
நாமக்கல் மாவட்டம் தனியாக பிரிக்கப்பட்டு, 15 ஆண்டுகள் ஆன நிலையில், பெயர் மற்றம் செய்யாமல், தொடர்ந்து, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை என்ற பெயரில் இயங்கி வருகிறது. இவ்வாலை, மோகனூரில் அமைந்துள்ளதால், ஆலைக்கு, மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை என, பெயர் மாற்றம் செய்ய, ஆலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ரூ.56.11 கோடி வறட்சி நிவாரண நிதி: வழங்கல்: அமைச்சர் தங்கமணி தகவல்

பள்ளிபாளையம்: ""நாமக்கல் மாவட்டத்தில், வறட்சி நிவாரண நிதியாக, 56.11 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது," என, விழாவில், தமிழக வேளாண் துறை அமைச்சர் தங்கமணி கூறினார். பள்ளிபாளையம் அடுத்த ஆவத்திப்பாளையத்தில், வேளாண் துறை சார்பில், உழவர் பெருவிழா நடந்தது. நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தலைமை வகித்தார். தமிழக தொழில் துறை அமைச்சர் தங்கமணி, கண்காட்சியை துவக்கி வைத்து பேசியதாவது:
விவசாயிகளின் நிலையை மேம்படுத்தும் வகையில், பல்வேறு திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தப்படுகிறது. இரண்டாம் பசுமை புரட்சியை அடைவோம், உணவு உற்பத்தியை பெருக்குவோம் என்பதை இலக்காக கொண்டு, ஆண்டு தோறும், உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது.
நாமக்கல் மாவட்டத்தில், இதுவரை, 289 வருவாய் கிராமங்களில், உழவர் பெருவிழா நடத்தப்பட்டுள்ளது. இவ்விழாவின் மூலம் விவசாயிகளுக்கு தேவையான தொழில் நுட்ப விளக்கங்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. மேலும், குறைவான தண்ணீரை கொண்டு எவ்வாறு விவசாயம் மேற்கொள்வது, அதற்கு ஏற்ற பயிர் வகைகள் என்ன என்பதையும், அரசு அலுவலர்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளது.
தோட்டக்கலை, வேளாண், வேளாண் பொறியியல், கூட்டுறவு, கால்நடை மற்றும் பல்வேறு துறைகள் மூலம், பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, 90 லட்சம் ரூபாய் மதிப்பில், பல்வேறு நலத்திட்ட உதவிகள், வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.
நாமக்கல் மாவட்டத்தில், 289 வருவாய் கிராமங்களில் நடந்த உழவர் பெருவிழாவில், 87 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயன்பெற்றுள்ளனர். நாமக்கல் மாவட்டத்தில், தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக, விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க, தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, நாமக்கல் மாவட்டத்தில், வறட்சி நிவாரண நிதியாக, 56.11 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்துக்கு, 40.50 லட்சம் ரூபாய் மதிப்பில், நடமாடும் மண் பரிசோதனை வாகனம் வழங்கப்பட்டுள்ளது. வேளாண் துறை மூலம் வழங்கப்படுகின்ற புதிய தொழில் நுட்பங்களை தெரிந்து, விவசாயிகள் பயன்பெற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

எம்.எல்.ஏ., பாஸ்கர், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் பழனிவேல், யூனியன் சேர்மன் செந்தில், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## பசுந்தீவனம் சாகுபடி விவசாயிகளுக்கு மானியம்

திருவள்ளூர்:மாவட்டத்தில், வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ், பசுந்தீவனம் சாகுபடி செய்ய அரசு மானியம் வழங்க உள்ளது.தமிழக அரசு சார்பில், விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.பசுந்தீவனம் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கத்தில், இரண்டு ஆண்டுகளாக, மாநில தீவன விரைவு அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தீவனப் புல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.கடந்த ஆண்டுகளை போலவே, இவ்வாண்டிலும் பசுந்தீவனம் சாகுபடிக்கு அரசு மானியம் வழங்கப்பட உள்ளது.தேவையான விவசாயிகள் தங்கள் அருகாமையில் உள்ள கால்நடை நிலையங்களை அணுகி பயன்பெறுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## கால்நடை தீவனம் வளர்க்க மானியம் விண்ணப்பங்கள் வரவேற்பு

காஞ்சிபுரம்:கால்நடை தீவனம் வளர்க்கும் திட்டத்திற்கு, விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என, மாவட்ட ஆட்சியர் தெரிவித்துஉள்ளார்.இது குறித்த அவரது அறிக்கை:காஞ்சிபுரம் மாவட்டத்தில், 550 ஏக்கரில், கால்நடை தீவனம் வளர்க்க அரசு மானியம் அறிவித்துள்ளது. குறைந்த அளவாக 0.25 ஏக்கர் முதல், ஒரு ஏக்கர் வரையில் விவசாயிகள்பயிரிடலாம். இதற்கான, விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து இருந்து வரவேற்கப்படுகின்றன. ஒரு ஏக்கரில், பயிரிடும் விவசாயிக்கு 8,000 ரூபாய் வரையிலும் மானியம் வழங்கப் படும். மதுராந்தகம், செய்யூர், மற்றும் உத்திரமேரூர் ஆகிய, வட்டாரங்களில் உள்ள விவசாயிகள், தங்கள் நிலங்களை சீர் செய்து, தீவனப் பயிரை பயிரிட்டு, பயனடையலாம். தகுதியுடைய, விவசாயிகள் வேளாண்மை அலுவலரின் பரிந்துரை சான்று பெற்று, அருகில் உள்ள

கால்நடை மருத்துவ மனைகளில், உதவி மருத்துவரிடம் வழங்க வேண்டும்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விப்பேடு கிராமத்தில் வெள்ளரி சாகுபடி அமோகம் ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் லாபம்

திருக்கழுக்குன்றம்:திருக்கழுக்குன்றம் அடுத்த விப்பேடு கிராமத்தில்,கோடைகால பயிராக வெள்ளரி சாகுபடி செய்வதில், பல விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.திருக்கழுக்குன்றத்தை ”ற்றிஉள்ள கிராமங்களில், நெல், தர்பூசணி, நிலக்கடலை, வெண்டை, கத்திரி, பாகற்காய், புடலங்காய், காரமணி, ”ரைக்காய்போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இப்பகுதி விவசாயிகள், கோடை காலத்தில், 200 ஏக்கரில் வெள்ளரியை அதிக அளவில் பயிர்இடுகின்றனர்.இதுகுறித்து, விப்பேடு விவசாயி தாஸ் கூறியதாவது:வெள்ளரி விதையை, நன்கு உழுத நிலத்தில், ஆறு அடி இடைவெளிவிட்டு குழி வெட்டி, ஒரு ஏக்கருக்கு ஏழு டன் தொழு உரம், இரண்டு மூட்டை ரசாயன உரம் கலந்து, விதை நேர்த்தி செய்த விதையை, ஒரு குழியில், நான்கு அல்லது ஐந்து விதைகள் நடவேண்டும். நட்ட நான்கு நாட்களில் செடிகள் முளைக்கும். பின், களைகளை அகற்றவேண்டும்.தேவைக்கேற்ப நீர் பாய்ச்சி, பூச்சிக்கொல்லி மருந்து, பயிர் ஊக்கிகள் தெளிக்க வேண்டும்.நட்ட, 40 நாட்களில், வெள்ளரி செடிகள் பிஞ்” விடும், அதன்பிறகு, 70 நாட்களில் பழம் பழுக்க ஆரம்பிக்கும், தர்பூசணி போல், ஒருமுறை மட்டும் அல்லாது, இரண்டு, மூன்று முறை மக‹ல் எடுக்கலாம்.இங்கு விளையும் வெள்ளரி பழங்கள், சரக்கு லாரிகள் மூலம் சென்னை, செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. நேரடியாகவும் வியாபாரிகள் வந்து, கொள்முதல் செய்கின்றனர். வெள்ளரி சாகுடியில், ஒரு ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் செலவு ஆகும். 35 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும்.இவ்வாறு, தாஸ் கூறினார்.

## மூலிகைச்செடி, மரக்கன்று நட வேண்டும் கலெக்டர் அலுவலக வளாகத்தில் புதுகை விவசாயிகள் கோரிக்கை

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை கலெக்டர் அலுவலக வளாகத்தில் மூலிகைச் செடிகள் மற்றும் பலன்தரும் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கும் பொறுப்பை தங்களிடம் ஒப்படைக்கவேண்டும்' என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

புதுக்கோட்டையில் தொண்டைமான் மன்னர்களின் அரண்மனையாக திகழ்ந்த வரலாற்று சிறப்புமிக்க கட்டிடம் தற்போது கலெக்டர் அலுவலகமாக செயல்படுகிறது. கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாகவும், புதுக்கோட்டைக்கு பெருமை சேர்ப்பதாகவும் கலெக்டர் அலுவலக

கட்டிடம் மற்றும் நுழைவு வாயில் உள்ளது.

இதன் அழகை கண்டு ரசிக்கவும், ஆய்வு நடத்தவும் ஏராளமான சுற்றுலா பயணிகள், கட்டிடக்கலை நிபுணர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் வந்தவண்ணம் உள்ளனர். கிட்டத்தட்ட 100 ஏக்கர் பரப்பளவு கொண்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் சந்தனம், ஈட்டி, தேக்கு, புளி, கோங்கு போன்ற உயர்ரக மரங்கள் வானுயர வளர்ந்து அரண்மனைக்கு அழகு சேர்த்துவந்தது. கலெக்டர் அலுவலகம் ஆனதற்கு பின்னால் புளியை தவிர இதர மரங்கள் அனைத்தும் இரவோடு, இரவாக மாயமாகி வந்தது. தற்போது முள்செடிகள், கருவேல மரங்கள் நிறைந்த புதர்பகுதியாக காட்சியளிக்கிறது. பன்றி மற்றும் குரங்குகளின் வசிப்பிடமாகவும் உள்ளது.

சுற்றுலா பயணிகள் மற்றும் வேளாண், தோட்டக்கலை பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள முள்செடிகள், கருவேல மரங்கள் மற்றும் புதர்களை அகற்றி அரிய வகை மூலிகைச் செடிகள், மா, கொய்யா, பலா, சப்போட்டா, நெல்லி, தேக்கு போன்ற பலன்தரும் மருங்களை நடவு செய்யவேண்டும் என மாவட்ட நிர்வாகத்தை விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

கலெக்டராக இருந்த சுகந்தி, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கலெக்டர் அலுவலக வளாகத்தின் ஒரு பகுதியை தேர்வு செய்து அதில் நூற்றுக் கணக்கான மூலிகை செடிகளை நடவு செய்தார். இவற்றை பராமரிக்கும் பொறுப்பு அரசுத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. கலெக்டராக சுகந்தி இருக்கும் வரை மூலிகை செடிகளுக்கு தண்ணீர் ஊற்றி பாதுகாத்துவந்த அரசுத் துறையினர் அவர் மாறுதலாகிச் சென்ற பின்னர் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டனர். ஒரு வாரத்துக்குள் அனைத்து மூலிகை செடிகளும் கருகி நின்ற இடம் தெரியாமல் போனது.

அதுபோன்ற நிலை மேலும் ஏற்படாமலிருக்க கலெக்டர் அலுவலக வளாத்தில் உள்ள முள் செடிகள் மற்றும் கருவேல மரங்களை அகற்றிவிட்டு மீண்டும் அரிய வகை மூலிகைச் செடிகள், பலன்தரும் மரங்களை நடவு செய்யவேண்டும். இவற்றை தண்ணீர் ஊற்றி பராமரிக்கும் பொறுப்பு விவசாயிகளிடம் ஒப்படைக்கவேண்டும்.

இதற்காக பெரிய அளவில் நிதி ஒதுக்கீடு எதுவும் தேவையில்லை. கலெக்டர் அலுவலக வளாகத்துக்குள் 6 குளங்கள் உள்ளது. கோடை காலத்தில் தண்ணீர் தேவையை சமாளிக்க இரண்டு அல்லது மூன்று இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்து தந்தால் செடிகளுக்கும், மரங்களுக்கு தண்ணீர் விட வசதியாக இருக்கும். ஐந்து ஆண்டுகளில் இவற்றின் மூலம் பலன் பெறலாம் என்பதால் விவசாயிகளுக்கு இந்த

வாய்ப்பை மாவட்ட நிர்வாகம் வழங்கவேண்டும் என இயற்கை விவசாயி தனபதி விருப்பம் தெரிவித்துள்ளார்.

## வறட்சி நிவாரண நிதி வழங்கப்படாததால் நிலையப்பட்டி கிராம விவசாயிகள் ஏமாற்றம்

புதுக்கோட்டை: புதுக்கோட்டை அருகே நிலையப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 250 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கப்படாததால் ஏமாற்றமடைந்துள்ளனர்.
புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் தாலுகா புல்வயல் கிராமத்துகுட்பட்டது நிலையப்பட்டி. இக்கிராமத்தில் கிட்டத்தட்ட 500 ஏக்கர் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களில் அப்பகுதியைச் சேர்ந்த 250 சிறு மற்றும் குறு விவசாயிகள் விவசாயம் செய்துவருகின்றனர். விவசாயிகளின் இந்த விளை நிலங்கள் அனைத்தும் ஒரே சர்வே நம்பரில்(எண்:297/2) மேஜர் இனாம் என்று உள்ளது. மன்னர் காலத்தில் தானமாக வழங்கப்பட்ட நிலம் என்பதால் மேஜர் இனாம் என அரசு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இதன்காரணமாக அக்கிராமத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு இதுவரை தனி பட்டா வழங்கப்படவில்லை. இதனால் அரசின் சலுகைகளை பெற முடியாமல் அக்கிராம விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர்.
மேஜர் இனாம் என்பதை வகை மாற்றம் செய்து விவசாயிகளின் பெயரில் தனி பட்டா வழங்கக் கோரி மாவட்ட கலெக்டர், ஆர்.டி.ஓ., தாசில்தார் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு பல முறை மனுக்கள் கொடுத்தும் இதுவரை பட்டா வழங்கப்படவில்லை.
இந்நிலையில் வறட்சினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு அரசு சார்பில், நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.
புல்வயல் பஞ்சாயத்துகுட்பட்ட இதர அனைத்து கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ள நிலையில் நிலையப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மட்டும் நிவாரண உதவித்தொகை வழங்கப்படவில்லை.
ஏமாற்றமடைந்துள்ள அப்பகுதி விவசாயிகள், "வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள தங்களுக்கும் அரசு சார்பில் நிவாரண நிதி உதவி வழங்கவேண்டும்' எனக்கோரி, தமிழக முதல்வர், வருவாய் மற்றும் வேளாண் துறை அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், கலெக்டர் ஆகியோருக்கு மனு அளித்துள்ளனர்.
புதுக்கோட்டை மாவட்டத்தில் பல கிராமங்களில் மேஜர் இனாம், மைனர் இனாம் என்றிருந்த நிலங்கள் வகைமாற்றம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

நிலையப்பட்டி கிராமத்தில் மட்டும் மேஜர் இனாம் என்பதை வகைமாற்றம் செய்து விவசாயிகளுக்கு பட்டா வழங்க வருவாய்த்துறையினர் முன்வரவில்லை.
மாவட்டம் நிர்வாகம் இதில் தனிக்கவனம் செலுத்தி விவசாயிகளின் நிலங்களை வகைமாற்றம் செய்து பட்டா வழங்கவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவிகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர்.

## சிவகிரியில் விவசாயிகள் குறைதீர்க்கும் முகாம்

சிவகிரி:சிவகிரியில் விவசாயிகள் குறைதீர்க்கும் முகாம் நடந்தது.
தென்காசி கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் முகாமிற்கு தென்காசி ஆர்டிஓ ரமேஷ் தலைமை வகித்தார். சிவகிரி தாசில்தார் புகாரி, செங்கோட்டை தாசில்தார் கிருஷ்ணவேணி முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் முன்னாள் அட்மா சேர்மன் டாக்டர் செண்பகவிநாயகம் பேசும்போது, மேற்கு தொடர்ச்சி மலையடிவாரப் பகுதிகளில் காட்டிலுள்ள வனவிலங்குகள் அருகிலுள்ள விவசாய நிலங்களுக்குள் புகுந்து விளைபொருட்களை சேதப்படுத்துகின்றன. இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. எனவே வனவிலங்குகள் வயல்பகுதிகளுக்குள் புகாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வனத்துறையினரால் அமைக்கப்பட்ட சோலார் முள்வேலி செயலிழந்து உள்ளது. அதனை சரி செய்ய வேண்டும்.பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றார்.
ராசிங்கபேரிகுளம் நீர்பிடிப்பு பாசனக்குழு தலைவர் சுப்பிரமணியன் பேசும்போது, விவசாயிகளால் தேர்வு செய்யப்பட்டுள்ள எங்களுக்கு என்ன அதிகாரம், பொறுப்பு என்பது குறித்து தேர்வு ஆகி இரண்டு ஆண்டுகள் ஆகியும் தெரியவில்லை. எங்களின் கோரிக்கையை அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட நெல் விவசாயத்திற்கு மட்டும் இல்லாமல் அனைத்து பயிர்களுக்கும் பாதிப்புக்கு தகுந்தவாறு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றார்.

சின்னாவுடையாப்பேரி நீர்பாசன குழு தலைவர் ரத்தினவேலு பேசும்போது, குளத்தில் உள்ள கரம்பை மண்ணை கூட விவசாயத்திற்கு அள்ள முடிவதில்லை. இதுகுறித்து கேட்டால் கலெக்டரிடம் அனுமதி வாங்கி வரச் சொல்கின்றனர். இதனால் விவசாயிகள் சரியாக விவசாயம் செய்ய முடியாத நிலையில் குறைந்த விளைச்சலை மட்டுமே பெற முடிகிறது. ஆனால் அனைத்து செங்கல் ‹ளைகளிலும் மலைபோல் மண் குவிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயம் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது. அரசின் இந்த கொள்கையை மாற்றி விஏஓ அளவில் அதிகாரத்தை தரவேண்டும். வயல் பகுதிகளுக்கு கரம்பை மண் அடிப்பதற்கு விஏஓ அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

ராயகிரி டவுன் பஞ்., தலைவர் இரணவீறு பேசும்போது, இப்பகுதி விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கையான கோம்பை ஆற்றுத் திட்டம், செண்பகவல்லி அணைத்திட்டம், உள்ளாறு நீர்த்தேக்க திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றார்.

தென்காசி ஆர்டிஒ பேசும் போது, விவசாயிகளின் கோரிக்கையை ஆய்வு செய்து மாவட்ட கலெக்டரிடம் சமர்ப்பிக்கப்படும் என்றார்.

ஆர்டிஒ தனி அலுவலர் ராஜாராம், மண்டல துணை தாசில்தார் சாம்பமூர்த்தி, விஏஒக்கள் மாரிமுத்து, கஸ்தூரி, சுந்தரி, கனகவள்ளி, வேளாண்மை துறை இயக்குனர் வெள்ளைப்பாண்டி, வணிகத்துறை கங்காதரன், கோமதிநாயகம், தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் குணசேகரன், முருகானந்தம், மாரியப்பன், முத்துமாரிஉட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உழவர் பெருவிழா

சாத்தூர்:சாத்தூர் தாலுகா சின்னஓடைப்பட்டி, சொக்கலிங்கபுரம் வருவாய்கிராமத்தில் வேளாண்மை துறையின் சார்பில், உழவர் பெருவிழா நடந்தது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழக பேராசிரியர் செல்லையா,பால்வளத்துறை அதிகாரி ஜெயராஜ் பேசினார். விவசாயிகளுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், கிராமிய கலை நிகழ்ச்சிகள் மூலம் திட்டங்கள் விளக்கப்பட்டன.

## விவசாயிகளுக்கு அழைப்பு

தேனி:கோடை மழையில் விதைப்பில் ஈடுபடும் விவசாயிகள், மானிய விலையில் விதைகளை பெற்றுக்கொள்ளலாம். மாவட்டம் முழுவதும் விவசாய விரிவாக்க மையங்களில், விதை நெல் இருப்பு உள்ளது. நெல் விதை கொள்முதல் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு உட்பட பயறு வகை விதைகளும், தேவைக்கு ஏற்ப இருப்பு உள்ளது. எண்ணெய் வித்துக்களும், பருத்தி விதைகளும் உள்ளன. பயறு வகை, எண்ணெய் வித்து விதைகள் வாங்கும் விவசாயிகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. கோடை மழை பெய்து வரும் நிலையில், விதைகள் வாங்க விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.எனவே விதைகள் தேவைப்படும், விவசாயிகள் விரிவாக்க மையங்களை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

## பருவமழை "ஏமாற்றிய' திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சி காய்ந்தது நெல்: வாடியது தென்னை: கண்ணீரில் விவசாயிகள்... தமிழக அரசின் பார்வை எப்போது

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சி பாதிப்பால் விவசாயிகள் தவிக்கின்றனர். மத்திய குழு வராததால், கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். திண்டுக்கல் மாவட்டம் முழுக்க விவசாயத்தை நம்பியே உள்ளது. பெரிய ஆறுகள் இல்லாத காரணத்தினால், அணைகளும், குளங்களும்,

கண்மாய்கள், கிணறுகளும்தான் பாசனத்தின் தூண்களாக விளங்குகின்றன. எந்தாண்டும் இல்லாத அளவிற்கு, இந்தாண்டு அவற்றில் 10 சதவீதம் கூட நீர் இருப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.வழக்கமாக திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சி என்றால், தஞ்சை மாவட்டத்திற்கு விவசாயிகள் செல்வார்கள். ஆனால் இந்தாண்டு தஞ்சையும் கடும் வறட்சியில் சிக்கி தவிப்பதால், விவசாயிகள் பரிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.50 ஆண்டு கால சராசரி மழையளவு: திண்டுக்கல் மாவட்டத்தில் 50 ஆண்டு கால சராசரி மழையளவில் ஜனவரியில் 33.9 மி.மீ., யும், பிப்ரவரியில் 10.8ம், மார்ச்சில் 15.7ம், ஏப்ரலில் 61.0ம், மே.78.4ம், ஜூன் 32.3ம், ஜூலை 30.6ம், ஆகஸ்ட்65.9ம், செப்டம்பர் 89.5ம், அக்டோபர்189.1ம், நவம்பர் 163.8ம், டிசம்பர் 65ம், மொத்தம் 836 மி.மீ., மழை பெய்திருக்க வேண்டும். இது கடந்த 50 ஆண்டு காலமாக நிகழ்ந்துள்ளது.கடந்தாண்டு மழை: கடந்தாண்டு மொத்தமே 506 மி.மீ.,தான் மழை பதிவாகியுள்ளது. நீர் இல்லை: மாவட்டத்தில் உள்ள 2065 மானாவாரி கண்மாய்களில் நீர் இருப்பு இல்லை.பரிதாபம்: மொத்தம் உள்ள 91488 பாசனக்கிணறுகளில் 10 சதவீதம் கிணறுகளில் 2மணிநேரமும், 90 சதவீதம் கிணறுகளில் ஒரு மணிநேரம் மட்டுமே பாசனத்திற்கு நீர் இருப்பு உள்ளது. திண்டுக்கல் நகருக்கு குடிநீர் வழங்கும் ஆத்தூர் நீர் தேக்கத்திலும் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. தற்போது கோடை வெயில் அதிகரித்துள்ளதால், கடும் குடிநீர் பஞ்சம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.பயிர்கள் நாசம்: திண்டுக்கல் மாவட்டத்தில் கடும் வறட்சியால் நெல் 5,925 ஏக்கரும், சிறுதானியங்கள் 14,715 ஏக்கரும், பயிர் 34, 158 ஏக்கரும், எண்ணெய் வித்துக்கள் 8,578 ஏக்கரும், கரும்பு 758 ஏக்கரும், பருத்தி 1,167 ஏக்கரும், மொத்தம் ஒரு லட்சத்து 55 ஆயிரம் 301ஏக்கரும், பாதிக்கப்பட்டுள்ளது.வறட்சி: மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள ஆத்தூர் பகுதி, வறட்சி காலத்திலும் விளைச்சல் ஏற்படும். இந்தாண்டு கடும் வறட்சியை சந்தித்துள்ளது.குடகனாறு ராஜ வாய்க்கால் மூலம் பாசனம் பெறும் சித்தையன்கோட்டை, பழயை செம்பட்டி, புதுப்பட்டி ஆகிய பகுதிகளில் 21 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன.ரெட்டியார் சத்திரம் ஒன்றியம் பலக்கனுத்து, கொத்தப்புளி, மாங்கரை ஆகியபகுதிகளில் வறட்சி பாதித்துள்ளது.ஒட்டன்சத்திரம், பழநி, வேடசந்தூர், நத்தம், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, கொடைக்கானல், தாண்டிக்குடி மலைப்பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன.கண்ணீர்: ஆத்தூர் சித்தையன்கோட்டை பகுதியில் 866 ஏக்கர் பயிரும், 380 விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். 1083 மெட்ரிக் டன் உணவு பொருட்கள் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:பாண்டியம்மாள்(சேடபட்டி): ஆடலூர், பன்றிமலையில் மழை பெய்ததால்தான் எங்களுக்கு விவசாயம். இந்தாண்டு மழை இல்லாததால், ஒரு போகம் கூட விளையாமல் போனது. கடனை வாங்கி விவசாயம் பார்த்து வட்டி கட்ட முடியாமல் தவிக்கிறோம்.லட்சுமி (சித்தையன்கோட்டை): கடந்த 30 ஆண்டுகளில் இதுமாதிரியான வறட்சியை நாங்கள் பார்த்தது இல்லை. எப்படியும் விளைந்து விடும். இந்தாண்டு களை எடுத்த கூலி கூட கிடைக்கவில்லை. ஒரு ஏக்கருக்கு ரூ.26 ஆயிரம் செலவழித்து நஷ்டமே

மிஞ்சி இருக்கிறது.மலைச்சாமி (சேடபட்டி): மலை இல்லாததால் புல்வெட்டி கண்மாய், சித்தையன்கோட்டை, ஆத்தூர், அக்கரைப்பட்டி, அழகர்நாயக்கன்பட்டி, நரசிங்கபுரம், பாளையங்கோட்டை, கூழம்பட்டி, போடிகாமன்வாடி உட்பட இடங்களில் உள்ள கண்மாய்கள் நிறையவில்லை. காய்ந்த பயிர்களை மாடுகளுக்கு இரையாக்கியுள்ளோம். நெல் பால் பிடிக்கும் போது தண்ணீர் வேண்டும். இது இல்லாததால், நாங்கள் கண்ணீர் வடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.பாப்பாத்தி (நடுப்பட்டி): மக்காச்சோளம் மழை இல்லாததால், காய்ந்து விட்டது. இதை மாடுகளுக்கு உணவாக்கி விட்டோம். தற்போது விளைச்சல் இல்லாததால், கூலி வேலைக்கு செல்கிறோம். அரசு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இடைத்தரர்கள் இல்லாமல் நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.விவசாய சங்கத்தை சேர்ந்த பெருமாள்சாமி, ராஜரத்தினம் கூறியதாவது: திண்டுக்கல் மாவட்டத்தில் 24 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்படும். இந்தாண்டு 6,400 ஏக்கரில் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. மக்காசோளம், எண்ணெய் வித்து, பருத்தி, சிறுதானியங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. டி.ஏ.பி. உரம் ரூ.485ல் இருந்து ரூ.1400க்கு உயர்ந்துள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.25 ஆயிரமும், கூலி தொழிலாளிக்கு ரூ. 10 ஆயிரமும் வழங்க வேண்டும். பாதிப்புகள் அதிகமாக இருக்கும் போது மத்திய குழு திண்டுக்கல் மாவட்டத்தை புறக்கணித்துள்ளதால், நாங்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளோம், என்றனர்.பழநி: பழநி,தொப்பம்பட்டியில் போதிய மழையில்லை. வரதமாநதி, பாலாறு பொருந்தலாறு, குதிரையாறு அணைகளுக்கு தண்ணீர் வரத்து இல்லாமல் நீர்மட்டம் குறைந்துள்ளது. ஆறுகள், குளங்கள் வறண்டுள்ளன. பழநி மற்றும் சுற்றுப்புறப்பகுதிகளில் 5,500 எக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்கின்றனர். போதிய மழையில்லாத காரணத்தால் இவ்வாண்டு குறைந்தளவே நெல் நடவு பணிகளை விவசாயிகள் மேற்கொண்டனர். புளியம்பட்டி, பழநி - கொடைக்கானல் ரோடு, வண்டிவாய்க்கால், வையாபுரி பாசன விவசாயிகள் நெல் நடவுபணிகளை மேற்கொண்டனர். அடிக்கடி ஏற்படும் மின்தடையால் பம்பு செட் மோட்டாரும் பயன்படுத்த முடியவில்லை.சந்தையில் ஆடுகள்: தொப்பம்பட்டி ஒன்றியத்தில் வாகரை, கொத்தயம், பொருளூர், வேப்பன் வலசு போன்ற பகுதிகளில் கடும் வறட்சிகாரணமாக பல லட்ச ரூபாய் மதிப்புள்ள மக்காசோளம் வீணாகி கருகி காணப்படுகிறது. குறைந்த தண்ணீர் தேவைப்படும் பருத்தி விவசாயமும் இந்தாண்டு கைகொடுக்கவில்லை. இப்பகுதியில் தண்ணீர் இல்லாததால், கால்நடை தீவனமான கம்பு, சோளம், கேழ்வரகு போன்றவை பயிரிட முடியாத, விவசாயிகள் ஆடு,மாடுகளை சந்தைகளில், குறைந்த விலையில் விற்கின்றனர். ஆயக்குடி, அமரப்பூண்டி, சட்டப்பாறை, கணக்கன்பட்டி போன்ற பகுதிகளில் மா, கொய்யா, புளி போன்றவைக்கு ஏக்கர் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகள் செலவு செய்துள்ளனர். இவ்வாண்டு கடும் வறட்சிகாரணமாக, கால் பங்கு கூட வருமானம் கிடைக்கவில்லை. வரத்து குறைவு: பழநி,தொப்பம்பட்டி பகுதிகளில் வறட்சி காரணமாக, நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. சொட்டுநீர் பாசனமுறை, கிணற்றுபாசனம் மூலம், பயிரிடப்பட்ட கத்திரி,

தக்காளி, அவரை, பாகற்காய், புடலை, முட்டைகோஸ் போன்ற காய்கறிகளின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. பாரபட்சம்: தமிழக அரசின் வறட்சி நிவாரணத்தொகையாக திண்டுக்கல் மாவட்டத்திற்கு 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மர வகைகளில் தென்னையை மட்டும் கணக்கெடுத்துள்ளனர். மா,கொய்யா, எலுமிச்சை, புளி ஆகிய மரங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. கொத்தயம் விவசாயி துரைராஜ் கூறுகையில், "போதிய மழையில்லாததால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கிணறுகளில் தண்ணீர் இல்லை. கால்நடைகளுக்கு தீவனம் வழங்க முடியவில்லை. ஏப்ரல், மே மாதங்களில் மக்காசோளம் பயிரிடுவது வழக்கும். மழையை நம்பி பணிகளை துவங்கமுடியாத நிலையில் உள்ளோம்,' என்றார்.கலெக்டர் வெங்கடாசலம் கூறியதாவது: வறட்சி பாதிப்பு நமது மாவட்டத்தில் அதிகம்தான், இதனால் அனைத்து விவசாயிகளுக்கும் பாரபட்சம் இல்லாமல் நிவாரண உதவிகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும், என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

13.05.2013 A.M

## மியான்மர் நோக்கி நகர்கிறது புயல் தமிழகத்தில் லேசான மழை பெய்யும்



சென்னை: வங்கக் கடலில் உருவான புயல் மத்திய கிழக்கு வங்கக் கடலில் மையம் கொண்டுள்ளது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து செல்வதாக உள்ளது. வங்கதேசம் மற்றும் மியான்மர் கடற்கரையில் இது கரை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வங்க கடலில் இலங்கைக்கு கிழக்கே கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு காற்றழுத்தம் உருவானது. இது மெல்ல வலுப்பெற்று நேற்று முன்தினம் புயலாக மாறியது. வட மேற்கு திசையில் நகர்ந்து தமிழகத்தில் கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காற்றின் போக்கு வடக்கு திசையாக அமைந்ததால் அந்த புயல் தற்போது வங்கதேசம் மற்றும் மியான்மர் கடலோர பகுதியை நோக்கி நகர்கிறது. இதனால் அந்த புயல் மியான்மரில் கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த புயல் தற்போது மத்திய கிழக்கு வங்கக் கடலில் மையம் கொண்டுள்ளது. புயல் கரையை கடக்கும் வரையில் கடலில் மணிக்கு 45 முதல் 55 கிமீ வேகத்தில் காற்று வீசும். அதனால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். இது தவிர சென்னை, கடலூர், நாகர்கோயில் துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு எண் 5 ஏற்றப்பட்டுள்ளது. அதே போல பாம்பன்,, புதுவை, தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு எண் 2 ஏற்றபட்டுள்ளது. புயல் காரணமாக தமிழக கடலோர பகுதியில் இன்று லேசான மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

## தேயிலைத்தூள் விலை சரிவு கிலோவுக்கு ரூ.4 குறைந்தது



குன்னூர் : குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் 19வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. மொத்தம் 15.40 லட்சம் கிலோ டீத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 11.19 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.21 லட்சம் கிலோவும் அடங்கும். வர்த்தகர்கள் அதிக அளவில் ஏலத்தில் பங்கேற்றாலும், தரமான தூளை மட்டுமே அவர்கள் கொள்முதல் செய்ததால் 28 சதவீத தூள் தேக்கமடைந்தது.

அனைத்து ரகத்துக்கும் கிலோவுக்கு ரூ.4 வரை விலை சரிவு ஏற்பட்டது. இலை ரகம் சாதா கிலோ ரூ.80 முதல் ரூ.82 வரையும், உயர் ரகம் ரூ.115 முதல் ரூ.150 வரையும், டஸ்ட் ரகம் சாதா ரூ.80 முதல் ரூ.83 வரையும், உயர் வகை ரூ.130 முதல் ரூ.160 வரையும் விற்றது. சிடிசி ரகத்துக்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.173ம், ஆர்த்தோடக்ஸ் ரகத்துக்கு ரூ.250ம் கிடைத்தது. அடுத்த ஏலத்துக்கு 14.84 லட்சம் கிலோ டீத்தூள் தயாராக உள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

13.05.2013 A.M

## விருதுநகர் மார்க்கெட் நிலவரம்: சமையல் எண்ணை, வத்தல் விலை குறைந்தது சீனி, நிலக்கடலை பருப்பு விலை உயர்வு

விருதுநகர்,

விருதுநகர் மார்க்கெட் டில் சமையல் எண்ணை, வத்தல் ஆகியவற்றின் விலை குறைந்து உள்ள நிலையில், சீனி, நிலக் கடலை பருப்பு ஆகியவற் றின் விலை உயர்ந்துஉள் ளது.

உளுந்து

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடை ரூ.3,600 முதல் ரூ.4,400 வரை விற்பனை செய்யப்பட்டது. உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.4,600 முதல் ரூ.6,600 வரை யிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.4,200 முதல் ரூ.4,600 வரையிலும் விற்பனை செய் யப்பட்டது. துவரை 100 கிலோ மூடை ரூ.3,800 முதல் ரூ.4,600 வரையிலும், துவரம் பருப்பு ரூ.5,400 முதல் ரூ.6,800 வரையிலும் விலை இருந்தது. பாசிப்பயறு 100 கிலோ மூடை ரூ.5,500 முதல் ரூ.6,600 வரையிலும், பாசிப் பருப்பு ரூ.7,200 முதல் ரூ.7,800 வரையிலும் விலை சொல்லப் பட்டது.

விருதுநகர் மல்லி மார்க் கெட்டில் மல்லி 40 கிலோ மூடை நாடு ரகம் ரூ.4,600 முதல் ரூ.4,700 வரையிலும், மல்லி லயன் ரகம் ரூ.3,000 முதல் ரூ.3,200 வரையிலும் விற்பனை ஆனது. வத்தல் வரத்து அதிகரித்ததால் குவிண்டாலுக்கு ரூ.1000 வரை விலை குறைந்தது.

வத்தல் சம்பா ரகம் குவிண் டால் ரூ.4,500 முதல்ரூ.5,600 வரையிலும், ஏசி வத்தல் ரூ.7,000 முதல் ரூ.7,500 வரை யிலும், முண்டு வத்தல் ரூ.4,000 முதல் 5,600 வரையிலும், சோடை வத்தல் ரூ.1700 முதல் ரூ.2200 வரையிலும் விலை இருந்தது.

சமையல் எண்ணை

விருதுநகர் எண்ணைமார்க் கெட்டில் கடலை எண்ணை 15 கிலோ ரூ.10 விலை குறைந்து ரூ.1,800 ஆகவும், பாமாயில் 15 கிலோ ரூ.15 விலை குறைந்து ரூ.800 ஆகவும், நல் லெண்ணை 15 கிலோ

ரூ.4,059 ஆகவும், தேங்காய் எண்ணை ரூ.1,505 ஆகவும், சூரிய காந்தி எண்ணைரூ.1,410 ஆகவும் விற்பனை ஆனது.

நிலக்கடலை பருப்பு வரத்து குறைவு காரணமாக 80 கிலோவுக்கு ரூ.150 விலை உயர்ந்து ரூ.4,900 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோ ரூ.3,750 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.1,960 ஆகவும் விற் பனை ஆனது. விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டாலுக்கு ரூ.20 விலை உயர்ந்து ரூ.3,195 ஆகவும், கொண்டைக் கடலை குவிண் டால் ரூ.3,800 ஆகவும்,பொரி கடலை 55 கிலோ ரூ.2,900 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.2,900 முதல் ரூ.3000 வரையிலும் விற்பனை செய் யப்பட்டது. பட்டாணி பருப்பு ரூ.3,100 முதல் ரூ.3,400 ஆகவும், மசூர் பருப்பு ரூ.4,000 முதல் ரூ.4,100 வரையிலும், மைதா 90 கிலோவுக்கு ரூ.40 விலை குறைந்து ரூ.2,930 ஆகவும், ரவை 90 கிலோவுக்கு ரூ.40 விலை குறைந்து ரூ.2,950 ஆகவும் விற்பனை ஆனது.

காபி

விருதுநகர் காபி மார்க்கெட் டில் காபி பிளாண்டேசன் ‘பிபி’ ரகம் 50 கிலோ ரூ.9,250 ஆகவும், ‘ஏ’ரகம் ரூ.9,850ஆகவும்,‘சி’ ரகம் ரூ.8,250 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.7,700 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.6,750 ஆகவும் விற்பனையானது.

## தூத்துக்குடியில் காய்கறிகள் விலை உயர்வு

தூத்துக்குடி,

தூத்துக்குடியில் காய்கறிகள் வரத்து குறைந்துள்ளதால், விலை அதிகரித்து வருகிறது.

காய்கறிகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்பிடி தடைகாலம் காரணமாக விசைப் படகுகள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. மீன்கள் வரத்து முற்றிலும் குறைந்து விட்டது. அதே நேரத்தில் கோவில் திருவிழாக்காலமாக இருப்பதாலும், மக்கள் காய்கறிகளை அதிக அளவில் வாங்கி வருகின்றனர்.

இதனால் காய்கறிகளின் தேவை அதிகரித்து உள்ளது. ஆனால் வறட்சி காரணமாக உற்பத்தி குறைந்து மார்க்கெட்டுக்கு காய்கறிகளின் வரத்து குறைந்து காணப்படுகிறது. பெரும்பாலான காய்கறிகளின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

விலை அதிகரிப்பு

தூத்துக்குடி மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் பயிரிடப்பட்ட காய்கறிகளை விவசாயிகள் தூத்துக்குடி உழவர் சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர். அதே போல் வெளியூர்களில் இருந்து வரும் கேரட், பீன்ஸ் போன்ற காய்கறிகளின் விலையும் உயர்ந்துள்ளது.

குறிப்பாக தூத்துக்குடி உழவர் சந்தையில் சில நாட்களுக்கு முன்பு 8 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ தக்காளி விலை கிடு கிடுவென உயர்ந்து 32 ரூபாய்க்கு விற்பனையாது. ஒரு கிலோ ரூ.40-க்கு விற்பனையான அவரைக்காய் ரூ.65 ஆகவும், ரூ.24-க்கு விற்பனையான கேரட் ரூ.60 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் வெளி மார்க்கெட்டில் உழவர் சந்தை விலையை விட சற்று கூடுதலாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## அன்னவாசல் பகுதியில் விவசாயிகளுக்கு, மானிய விலையில் விசைத்தெளிப்பான் உழவர் பெருவிழாவில் வழங்கப்பட்டது

புதுக்கோட்டை,

அன்னவாசல் பகுதியில் 2 கிராமங்களில் நடந்த உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு, மானிய விலையில் விசைத் தெளிப்பான் வழங்கப் பட்டது.

உழவர் பெருவிழா

அன்னவாசல் வட்டாரத் தில் வேளாண்மை துறை சார்பில் வெள்ளனூர் மற்றும் பூங்குடி ஆகிய இரு வருவாய் கிராமங்களில் உழவர் பெரு விழா நடைபெற்றது. வெள்ள னூர் கிராமத்தில் நடந்த விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் தங்கையா மற்றும் பூங்குடியில் நடந்த விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் தலைமை தாங்கினார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக புதுக்கோட்டை வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) சதானாந்தம், வேளாண் வணிகம் துணை இயக்குனர் அண்ணாமலை ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். வேளாண்மை உதவி இயக்குனர் சிங்காரம் வரவேற் றார். விழாவில், வேளாண்மை துறையில் செயல்படுத்தப் படும் திட்டங்கள் மற்றும் மானி யங்கள் பற்றி வேளாண் மை அலுவலர் சுமித்ராதேவி எடுத்து கூறினார்.

மானிய விலையில் இடுபொருட்கள்

விழாவில் வேளாண் துறை மற்றும் அது சார்ந்த துறைகளை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு, தங்களது துறை சார்ந்த திட்டங்கள் பற்றி எடு த்து கூறினார்கள். வேளாண் அலுவலர் சுமித்ராதேவி மற்றும் வேளாண் அலுவலர் வேல்முருகன் ஆகியோரால், மண் மாதிரி எடுத்தல்,

விதை நேர்த்தி செய்தல், எலி ஒழிப்பு, கோனோவீடர் களைக் கருவி யை பயன்படுத்தி களைகளை கட்டுப்படுத்தும் முறை, இலை வண்ண அட்டை பயன்படுத் தும் முறை போன்ற தொழில் நுட்ப செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

விழாவில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகள், தொழில்நுட்ப கையேடுகள், தொழில்நுட்ப பிரசுரங்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

விவசாயிகளுக்கு மானிய விலையில் நுண்சத்துக்கள், கைத்தெளிப்பான், ஜிப்சம் ஆகிய இடுபொருட்கள் வேளாண்மை துறை சார்பாக பயனாளிகளுக்கு வழங்கப் பட்டது. முடிவில் வேளாண் உதவி அலுவலர் மணிவேல்¢ நன்றி கூறினார்.

## மேட்டுப்பாளையம் மொத்த காய்கறி மண்டியில் பீன்ஸ் விலை குறைந்ததால் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க கோரிக்கை

கொலக்கம்பை,

மேட்டுப்பாளையம் மொத்த காய்கறி மண்டியில் பீன்ஸ் விலை குறைந்ததால் அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

மலை தோட்ட காய் கறிகள்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக மலை தோட்ட காய் கறி பயிர் களை விவசாயம் செய்ய விவ சாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதன் மூலம் ஆண்டுக்கு சராசரியாக வரு மானமும் ஈட்டி அதன் மூலம் பயன் பெற்று வருகின்ற னர்.

இந்த நிலையில் கொலக் கம்பை அருகே உள்ள தூதூர் மட்டம், கரும்பாலம், கிளிஞ்சடா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருக்கும் பெரும் பாலான விவசாயிகள் தங்க ளுடைய தோட்டங்களில் மலை தோட்ட காய்கறி பயிர் களான முட்டைகோஸ், உரு ளைக் கிழங்கு, காலி பிளவர், மேரக் காய், பீன்ஸ் உள்ளிட்ட வற்றை பயிர் செய்து வருகின்ற னர்.

பீன்ஸ் பயிர்கள்

இந்த நிலையில், தற்போது, பீன்ஸ் பயிரிடும் சீசன் என்ப தால், புஸ் பீன்ஸ், கறி பீன்ஸ், வால்டக்ஸ் போன்ற பல்வேறு பீன்ஸ்களை விவசாயிகள் பயிர் செய்து உள்ளனர். இதில், கொடியில் காய்க்கும் கறி வகை பீன்ஸ்கள் அறு வடைக்கு தயாரான நிலையில் உள்ளது. இங்கு அறுவடை செய்யப்படும் பீன்ஸ்கள் ஊட்டி மற்றும் மேட்டுப் பாளையம் சந்தைகளுக்கு

எடுத்து சென்று விவசாயிகள் விற்பனை செய்து வருகி றார் கள்.

தற்போது, ஒரு கிலோ கறி பீன்ஸ் ரூ.18 முதல் 25 வரை சந்தையில் விற்பனை ஆகிறது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்து வருகின்ற னர். இதுகுறித்து, விவசாயிகள் கூறுகையில், ஆண்டுதோறும் பீன்ஸ் பயிரிடுவது வழக்கம். அதேப்போல் இந்த ஆண்டும் புஸ் பீன்ஸ், கறி பீன்ஸ் போன்ற பீன்ஸ் வகைகளை பயிர் செய்து உள்ளோம்.

விவசாயிகள் கவலை

இந்த ஆண்டு போதிய அளவு பருவ மழை பெய்யாத தால் வன விலங்குகள் அடிக் கடி விவசாய நிலங்களில் புகுந்து பயிர்களை நாசம் செய்து வந்தன. இந்த நிலையில் தற்போது கறி பீன்ஸ் வகை களுக்கு குறைந்த அளவு விலை கிடைப்பதால் நாங்கள் கடுமை யாக பாதிக்கப்பட்டு உள் ளோம். எனவே, தமிழக அரசு விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை வீழ்ச்சி

குன்னூர்,

குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு தேவை குறைந்து இருந்ததால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 4 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

விற்பனை எண் 19-க்கான ஏலம் கடந்த 9, 10 ஆகிய தேதி களில் நடைபெற்றது. ஏலத் திற்கு மொத்தம் 15லட்சத்து 40 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 11 லட்சத்து 19 ஆயிரம் கிலோ இலை ரக மாகவும், 4 லட்சத்து 21 ஆயி ரம் கிலோ டஸ்ட் ரக மாகவும் இருந்தது.

விலை வீழ்ச்சி

இந்த ஏலத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. தேயிலை தூளுக்கு தேவை குறைந்து இருந்ததால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 4 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. சி.டி.சி.

தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 173 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 250 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலை யாக ஏலம் சென்றது.

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதா ரண வகை 80 ரூபாயில் இருந்து 82 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 115 ரூபாயில் இருந்து 150 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 80 ரூபாயில் இருந்து 83 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 130 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 20-க்கான ஏலம் வருகிற 16, 17 ஆகிய தேதி களில் நடக்கிறது. இந்த ஏலத்தில் மொத்தம் 14 லட் சத்து 84 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் காய்கறிகள் விலை கிடுகிடு உயர்வு 1 கிலோ இஞ்சி ரூ.200, தக்காளி ரூ.40

திருப்பூர்,

திருப்பூர் தென்னம் பாளையம் மார்க்கெட் டில் பெரும்பாலான காய்கறிகளின் விலை கிடுகிடு வென உயர்ந்து விட்டது. இதனால் ஒரு கிலோ இஞ்சி ரூ.200க்கும், தக்காளி ரூ.40க்கும் விற்பனை செய்யப்பட்டது.

திருப்பூர் மார்க்கெட்

திருப்பூர் தென்னம்பாளை யம் மார்க்கெட்டுக்கு அவி னாசி, பொங்கலூர், பல்லடம், தாராபுரம், காங்கயம் சுற்று வட்டார கிராமங்களில் இருந்து தக்காளி மற்றும் அனைத்து வித காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது.
கடந்த சில மாதங்களாகவே மழை இல்லாததாலும், கிண றுகளில் இருந்த தண்ணீர் வற்றிவிட்டதாலும் காய்கறிகள் மற்றும் தக்காளி உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு விட்டது. இதனால் காய்கறிகள் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து விட்டது.

விலை உயர்வு

இந்த நிலையில் ஒரு சில விவசாயிகள் தங்களது தோட் டங்களில் உள்ள கிணற்றில் இருக்கும் சிறிதளவு தண்ணீரை கொண்டு கத்தரிகாய், வெண் டைகாய் போன்றவற்றை பயிர் செய்து 5 கிலோ முதல் 10 கிலோ வரை மட்டுமே விற் பனைக்கு கொண்டு வருகிறார் கள்.

இதனால் கத்தரிகாய் மற்றும் வெண்டைகாய் விலை மட்டும் 1 கிலோ ரூ.50-ல் இருந்து ரூ.25 ஆக குறைந்து விட்டது. மற்ற காய்கறிகளான புடலங்காய் கிலோ ரூ.25க் கும், பாகற்காய் ரூ.30க்கும்,

பீர்க்கங்காய் ரூ.35க்கும், அவரைக்காய் ரூ.70க்கும், கேரட் ரூ.50க்கும், பீன்ஸ் ரூ.80க்கும், முட்டைகோஸ் ரூ.25க்கும், உருளைக்கிழங்கு ரூ.30க்கும், பீட்ரூட் ரூ.40க்கும் விற்பனை செய்யப்பட்டது.

அதேபோல ஒரு கிலோ பச்சை மிளகாய் ரூ.60க்கும், இஞ்சி ரூ.200க்கும், ஒரு கட்டு மல்லிதழை ரூ.30க்கும் என்று வரலாறு காணாத அளவுக்கு விலை உயர்ந்து உள்ளது.

தென்னம்பாளையம் மார்க் கெட்டில் நேற்று தக்காளி வரத்து மிகவும் குறைந்து இருந்தது. வழக்கமாக 75 முதல் 100 டன் வரை வரத்து இருந்து வந்த நிலை யில் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து நேற்று ஒரு டன் தக்காளி மட்டுமே விற் பனைக்கு வந்து இருந்தது.
இதனால் தக்காளி மார்க்கெட் வெறிச் சோடி காணப்பட்டது. நேற்று 15 கிலோ எடை கொண்ட ஒரு பெட்டி தக் காளி விலை ரூ.500 ஆக உயர்ந்து இருந்தது. இதில் 2Ñ கிலோ வரை வீணாகி விடும் நிலையில் 12Ñ கிலோ தக்காளி விலை ரூ.500. எனவே ஒரு கிலோ தக்காளியின் மொத்த விலை ரூ.40 ஆக இருந்தது. இவ்வாறு தக்காளி உள்பட பல்வேறு காய்கறிகளின் விலையும் மிகவும் உயர்ந்து இருந்ததால் விற்பனை குறை வாகவே இருந்தது.